Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : ASSISTANT SESSIONS JUDGE, KULITHALAI |
| Calendar | |
| Miscellaneous | : Case No.**S.C. 70/2019** |
| Sessions | |
| Deposition of Witness for | : Prosecution அ.சா.<br>Defense<br>Court |
| Name | : பாஸ்கரன் |
| Father's Name | : காத்தான் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **21.10.2021.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் குளித்தலை காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியில்இருந்தபோது குளித்தலை காவல்நிலை குற்றஎண். 565/2018 வழக்கு சம்பந்தமாக 21.11.2018 அன்று காலை 7 மணியளவில் குளித்தலை தாலுகா கவுண்டம்பட்டி ஒத்தக்கடை பஸ் நிறுத்தம் அருகே வாகன சோதனையில் ஈடுபட்டபோது அப்பொழுது இருசக்கர வாகனத்தில் வந்த தேவா என்கிற தேவராஜ், சந்தனபாண்டியன். சூர்யா என்கிற பாலசுப்ரமணியன் ஆகிய மூவரும் போலீஸார் ஆகிய எங்களை கண்டதும் தப்பி ஓட முயற்சித்த போது அவர்களை வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர்கள் ஏற்கனவே கடந்த 11.11.2018 அன்று நெய்தலூர் காலனி வொயின் ஷாப் கடை விற்பனையாளரிடம் பணம் கொள்ளையடித்தது சம்பந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் தானாக முன்வந்து கொடுப்பதாக கூறியதை அடுத்து அப்பகுதி கிராம நிர்வாக அலுவலர் கோவர்த்தணா மற்றும் கிராம உதவியாளர் வசந்தா ஆகியோர் முன்னிலையில் மேற்படி நபர்களை விசாரித்து அவர்கள்

முன்னிலையில் கைதுசெய்து அச்சுறுத்தலோ துன்புறுத்தலோ ஏதுமின்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்ததில் மேற்படி எதிரிகள் அவர்களுடன் சேர்ந்து ஜெயகாந்தன், அசோக்குமார், சங்கப்பிள்ளை, மணிகண்டன் ஆகியோரும் பல்வேறு குற்றச்சம்பவங்களில் ஈடுட்டதுடன் கடந்த 07.10.2018 அன்று பிள்ளாபாளையம் வொயின் ஷாப் விற்பனையாளரிடம் கொள்ளையடித்தது சம்பந்தமாக 18.10.2018 அன்று வாழ்வார்மங்கலம் வொயின்ஷாப் விற்பனையாளரிடம் கொள்ளையடித்தது சம்பந்தமாகவும் 28.10.2018 தேதி திருச்சி மாவட்டம் அரியாவூர் வொயின்ஷாப் விற்பனையாளரிடம் கொள்ளையடித்தது சம்பந்தமாகவும், 11.11.2018 அன்று நெய்தலூர் காலனி வொயின்ஷாப் விற்பனையாளரிடம் கொள்ளையடித்தது சம்பந்தமாகவும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறினார்கள். குளித்தலை காவல்நிலைய சம்பந்தப்பட்ட வழக்கு தடயங்களை கைப்பற்றி நீதிமன்ற காவலுக்கு எதிரிகளை அனுப்பி வைத்து விசாரணை மேற்கொண்டேன்.

1 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நெய்தலூர் காலனிக்கும் குளித்தலைக்கும் சுமார் 25 கிலோமீட்டர் தூரம் இருக்கும். நீதிமன்றத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ய வாய்ப்பு உள்ளது என்றால் அங்கேயே ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ய வாய்ப்பு இருந்ததால் கிராம நிர்வாக அதிகாரி முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்தேன். எதிரிகள் எந்தவிதமான ஒப்புதல்வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றால்சரியல்ல. ஒப்புதல்வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்தபொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால்சரியல்ல. இதுசம்பந்தமக சிந்தாமணிப்பட்டி காவல்ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதன் அடிப்படையில் அந்தந்த காவல்நிலையத்திற்கு நான் எழுத்துப்பூர்வமாக தெரிக்கவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல்வாக்குமூலத்தின் நகலை சம்பந்தப்பட்ட காவல்நிலையத்திற்கு அனுப்பிவைத்தேன். ஒப்புதல்வாக்குமூலத்தின் நகலை சம்பந்தப்பட்ட காவல்நிலையத்திற்கு அனுப்பவில்லை என்பதால்தான் இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால்சரியல்ல.

ஒம்/ பாஸ்கரன்

ஒம்/எம். சண்முக கனி
சார்பு நீதிபதி,
குளித்தலை.